**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்**

**முதலாம் தவணைப் பரீட்சை - 2024**

| தரம் - 12 (2025) | பொருளியல் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 01) **3** | 06) **4** | 11) **3** | 16) **2** |
| 02) **4** | 07) **2** | 12) **4** | 17) **5** |
| 03) **2** | 08) **3** | 13) **4** | 18) **4** |
| 04) **3** | 09) **4** | 14) **5** | 19) **2** |
| 05) **3** | 10) **5** | 15) **2** | 20) **4** |

## பகுதி - II

பொருளாதார வளங்களின் வகைகள்

1) சொத்து வளம் - நிலம், மூலதனம்

2) மனிதவளம் - உழைப்பு முயற்சியாண்மை

அல்லது

1. நிலம்
2. உழைப்பு
3. மூலதனம்
4. முயற்சியாண்மை (2 புள்ளிகள்)

3) 1. வளச் செலவு

2. அமையச் செலவு (2 புள்ளிகள்)

| இலவசப் பண்டம் | பொருளாதாரப் பண்டம் |
|---|---|
| 1. வளச் செலவு இல்லை | வளச் செலவு உண்டு |
| 2. அமையச் செலவு இல்லை | அமையச் செலவு உண்டு |

(2 புள்ளிகள்)

4) 1. உற்பத்திக் காரணிகளை மாற்றியமைத்து குறித்த பொருள் அல்லது சேவையை உற்பத்தி செய்வதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளல்.

2. உற்பத்திச் செயற்பாட்டை ஒழுங்கமைத்தல்
3. புதியனவற்றை அறிமுகப்படுத்தல்
4. ஆபத்துக்களை ஏற்றல் (4 புள்ளிகள்)

5) 1. பௌதீக மூலதனம் / மெய் மூலதனம் / நிலையான மூலதனம்

2. பொருளாதார பொதுச் செயற்பாட்டு மூலதனம்
3. சமூக பொதுச் செயற்பாட்டு மூலதனம்
4. தொழிற்படு மூலதனம் / சுழலும் மூலதனம் (4 புள்ளிகள்)



kalvi.lk

பகுதி "அ"

01) 1. மனிதனின் அளவற்ற விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்கள் வரையறுக்கப்பட்டதாக இருத்தல் அருமை எனப்படும். *(1 புள்ளி)*

வளங்கள் அருமையாகக் காணப்படுவதனால் சமூகம் விரும்பும் அனைத்தையும் பெறமுடியாத நிலைமை ஒன்று காணப்படும். *(1 புள்ளி)*

அருமையான வளங்கள் மாற்றுப் பயன்பாட்டையும் கொண்டிருக்கின்ற சந்தர்பப்பத்தில் பல்வேறு மாற்றீடுகளுக்கு மத்தியில் வினைத் திறனுள்ள வகையில் தெரிவினை மேற்கொள்ளுகின்ற போது வேறு ஒன்றைத் தெரிவு செய்ய முடியாத நிலை காணப்படும். *(1 புள்ளி)*

எனவே ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு விட்டுக் கொடுக்கப்படுகின்ற அடுத்த சிறந்த தெரிவின் மெய்பெறுமதியே அமையச் செலவாகும். *(1 புள்ளி)*

2. சமூகத்தின் எல்லையற்ற விருப்பங்களுடன் ஒப்பிடுகையில் நிரம்பல் வரையறுக்கப்பட்ட அல்லது அருமைத் தன்மை கொண்ட வளங்கள் பொருளாதார வளங்களாகும். *(1 புள்ளி)*

பொருளாதார வளங்களின் பொருட்டு அமைச் செலவொன்று தோற்றம் பெறும். *(1 புள்ளி)*

Education கல்வி அத்யாபன

02) 1.
- ✶ அடிப்படைப் பிரச்சினைகள் மத்திய திட்டமிடல் குழுவின் மூலம் தீர்வு
- ✶ வளங்கள் (ஊழியர் தவிர) அரசவுடமையாக காணப்படல்.
- ✶ சமூக நலன் முக்கியம் பெறல்
- ✶ அதிகார ஊக்குவிப்புக்கள் காணப்படல்

(ஒரு விடயத்திற்கு *1* புள்ளி வீதம் மொத்தம் *4* புள்ளிகள்)
(எவையேனும் நான்கு விடயத்திற்கு *4* புள்ளிகள்)

2.
- ✶ விலைப் பொறிமுறை பயன்படுத்தப்படும். *(1 புள்ளி)*
- ✶ அருமையான வளங்களை பங்கீடு செய்தல். *(1 புள்ளி)*
- ✶ ஊக்கப்படுத்தல் சாதனமாக செயற்படல் *(1 புள்ளி)*
- ✶ தகவல்களை வழங்குதல் *(1 புள்ளி)*

3. வளங்கள் அரசுக்குரிமை *(1 புள்ளி)*
சமவுடைமைப் பொருளாதாரங்கள் *(1 புள்ளி)*
வளங்கள் தனியாருக்குரிமை *(1 புள்ளி)*
முதலாளித்துவப் பொருளாதாரம் *(1 புள்ளி)*

4.
- ✶ சுயநலன் அடிப்படையில் ஊக்குவிப்புக்கள்
- ✶ நுகர்வோர் இறமை காணப்படாமை
- ✶ அரசியல் தலையீடுகள்
- ✶ போட்டிச் சூழல் இல்லாமை



kalvi.lk

✶ தீர்மானங்களிலட் காலதாமதங்கள்

✶ சூழல் பாதிப்புக்கள்

✶ தரக்கட்டுப்பாடுகள் குறை

(எவையேனும் நான்கு விடயங்கள் இருப்பின் 4 புள்ளிகள்)

5. சமவுடமைப் பொருளாதாரங்கள் போட்டிச் சூழலை ஏறட்படுத்துவதன் மூலம் தம்மை வினைத்திறன் ஆக்குவதற்கு தனியார் துறையினரையும் அனுமதிக்க முற்பட்டமையே சமவுடமைச் சந்தைப் பொருளாதாரமட் எனப்படும். (2 புள்ளி)

இறுக்கமான சமவுடமையில் காணப்பட்ட ஏதேனும் குறைபாடுகள் குறிப்பிடப்படின் (1 புள்ளி)

வளப் பயன்பாட்டுத் தீர்மான தனியாருக்கு வழங்கப்படுவதினால் வினைத்திறன் மிக்க வளப் பயன்பாடுகளை உருவாக்க முடிதல். (1 புள்ளி)

03) 1. ✶ வளங்கள் ஓரினத் தன்மை அற்றவை. (1 புள்ளி)


✶ ஒரு உற்பத்திக்கு தேர்ச்சியான வளம் மற்றைய வகை உற்பத்திக்கு தேர்ச்சியற்றிறுத்தல். (1 புள்ளி)

✶ அதிகரித்துச் செல்லும் அமையச் செலவை குறிக்கும். (1 புள்ளி)

✶ ஒருவகை உற்பத்தியை சம அளவில் அதிகரிக்கும் போது இழக்கப்படும் மற்றைய உறபத்தியின் அளவு படிப்படியாக அதிகரிக்கும். (1 புள்ளி)

2. வளத்திரும்பல் அதிகரிப்பு ஏற்படும் டீபாது நாட்டின் மெய் உற்பத்தியினளவு அதிகரிக்கும். (1 புள்ளி)

சாத்திய வளையி வலப்புறம் நோக்கி நகர்வடையும். (1 புள்ளி)





3. குறைந்த உள்ளீட்டில் / குறைந்த செலவில் அதிகூடிய உற்பத்தி மட்டத்தை அடைதல் உற்பத்தி வினைத்திறன் எனப்படும். (1 புள்ளி)

எடுகோள்கள் 1. வளங்களின் முழுப் பயன்பாடு (1 புள்ளி)

2. வளங்களின் வினைத்திறனான பயன்பாடு (1 புள்ளி)


இந்நிலையில் பொருளாதாரத்தில் உற்பத்திப் புள்ளி உற்பத்தி சாத்திய வளையி மீது காணப்படும்.







kalvi.lk


4. அ)





ஆ)




இ)




ஈ)




✶ ஏதேனும் பொருத்தமான பண்டங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

✶ வரைபு சரியாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

04) 1. பதிலீட்டுப் பொருட்களின் விலை அதிகரிப்பு
நிரப்பிப் பொருட்களின் விலை வீழ்ச்சி
நுகர்வோரது பண வருமானம் அதிகரிப்பு
பொருளின் வீதா சுவை அதிகரிப்பு
விளம்பரங்கள் தூண்டுதல்
எதிர்காலத்தில் விலை அதிகரிக்கும் என நுகர்வொர் எதிர்பார்த்தல்
நுகர்வோரது எண்ணிக்கை அதிகரித்தல்

(நுகர்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு உட்பட எவையேனும் நான்கு)

($4 \times 1 = 4$ புள்ளிகள்)

2. சாதாரன பொருள் - வருமானத்திற்கும் கேள்விக்குமடையே நேரான தொடர்பு நிலவும்.
இழிவுப் பொருள் - வருமானத்திற்கும் கேள்விக்குமிடையே எதிரான தொடர்பு நிலவும்.
கிஃபன் பொருள் - விலைக்கும் கேள்விக்குமிடையே எதிரான தொடர்பு நிலவும்.

($3 \times 1 = 3$ புள்ளிகள்)

3. பண்டமொன்றில் கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் குறிப்பிட்ட பண்டத்தின் விலைக்கும் அப்பண்டத்தின் கேள்வித்தொகைக்குமிடையே எதிரான தொடர்பு நிலவுவது.
குறிப்பிட்ட பண்டத்தின் விலை வீழ்ச்சியடைந்தால் நுகர்வொரது மெய்வருமானம் அதிகரித்து கேள்வித்தொகை அதிகரிப்பதாகவும் (1 புள்ளி)





kalvi.lk

குறிப்பிட்ட பண்டத்தின் விலை உயர்வடையும் போது நுகர்வோரது மெய்வருமானம் குறைவடைந்து கேள்வித் தொகை வீழ்ச்சியடைவதாகவும் காணப்படும். *(1 புள்ளி)*
எனவே வருமான விளைவின் பண்டமொன்றின் விலைக்கும் அப்பண்டத்தில் கேள்வித் தொகைக்குமிடையே எதிரான தொடர்பு நிலவுகின்றது. *(1 புள்ளி)*

4. இழிவுப் பண்டம் தொடர்பாக விலைமாற்றத்தின் வருமான விளைவு எதிர்க் கணியமாகவும், பதிலீட்டு விளைவு எதிர்க்கணியமாகவும் அமையும். *(1 புள்ளி)*
எனினும் இழிவுப் பண்டம் தொடர்பாக எதிர்க்கணிய வருமான விளைவினை விட எதிர்க்கணிய பதிலீட்டு விளைவு வலுக்கூடியதாக காணப்படும்.
எனவே இழிவுப் பண்டத்தின் விலை விளைவினைத் தீர்மானிப்பதாக பதிலீட்டு விளைவு காணப்படும். *(1 புள்ளி)*
இதன் பிரகாரம் விலை மாற்றத்திற்கும் சார்பு விலை மாற்றத்திற்கும் இடையே நேரான தொடர்பு நிலவுவதோடு விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையே எதிரான தொடர்பு நிலவும். *(1 புள்ளி)*

5. A)




*(1 புள்ளி)*

B) $b = \frac{\Delta Qd}{\Delta P}$

$= \frac{-60}{20}$

$= -3$ *(1 புள்ளி)*

$Qd = a - 3P$

$90 = a - 3 \times 20$

$90 = a - 60$

$a = 120$

$Qd = 120 - 3P$ *(1 புள்ளி)*

C) $Qd = 120 - 3P$

$= 120 - 3 \times 0$

$= 120$

ஆகக் கூடுதலான
கேள்வி அளவு $= 120$ *(1 புள்ளி)*




kalvi.lk

05) 1. 1) $PED = \frac{\Delta Qd\%}{\Delta P\%} \times \frac{P}{Qd}$ (1 புள்ளி)

$= \frac{5\%}{10\%}$

$= -0.5$ (1 புள்ளி)

2) $CED = \frac{Qd_2\%}{P_2\%}$ (1 புள்ளி)

$= \frac{15\%}{10\%}$

$= 1.5\ \%$ (1 புள்ளி)

3) $YED = \frac{\Delta Qd\%}{\Delta Y\%}$ (1 புள்ளி)

$= \frac{4\%}{10\%}$

$= 0.4$ (1 புள்ளி)

4) ஆம் (1 புள்ளி)

$CED$ நேர்ப் பெறுமானத்தில் உள்ளது. (1 புள்ளி)

2. ஆம் (1 புள்ளி)

அலகு நெகிழ்ச்சியாயின் விற்பனை வருமானம் / நுகர்வோன் செலவு நிலையானதாக காணப்படல் வேண்டும்.

$10 \times 4000 = 40000/=$

$20 \times 2000 = 40000/=$ (1 புள்ளி)

வில் நெகிழ்ச்சியில் கணிப்பிட்டால் $\frac{\Delta Qd}{\Delta P} \times \frac{P+P_1/_2}{Q+Q_1/_2}$ (1 புள்ளி)

$= \frac{2000}{10} \times \frac{30}{6000}$

$= -1$ (1 புள்ளி)

3. $PED > 1$ (2 புள்ளி)

$PED = 1$ (2 புள்ளி)

4. 1) உற்பத்திகளின் விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுகிறது. (1 புள்ளி)

2) நுகர்வோன் செலவு மாற்றங்களை மதிப்பிட முடிதல். (1 புள்ளி)

3) அரச வரி, மானியக் கொள்கைகளுக்குப் பயன்படல் (1 புள்ளி)

4) ஊழியர்களின் வேதனங்கள், சம்பளங்கள் போன்றவற்றை தீர்மானிப்பதற்கு உதவுகின்றது. (1 புள்ளி)



kalvi.lk

06) 1. ஏனையவை மாறாதிருக்க குறிப்பிட்ட பண்டத்தின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு முழுவதும் இலாபமாக மாற்றமடைவதனால், *(2 புள்ளி)*

இலாபத்தினால் கவரப்படும் உற்பத்தியினர் பயன்படுத்தப்படாதுள்ள வளங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பண்டத்தின் வெளியீட்டை அதிகரிக்க நினைப்பார். *(1 புள்ளி)*

அல்லது தொடர்புடைய பண்டங்களின் உற்பத்தியில் பயன்படுத்திய வெளியீட்டை அதிகரிப்பார். *(1 புள்ளி)*

இதன் மூலம் குறிப்பிட்ட பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது நிரம்பல் தொகையும் அதிகரிப்பதாக காணப்படும். *(1 புள்ளி)*

2. அதிகரிக்கும் அமையச் செலவு *(1 புள்ளி)*


விளக்கம் *(1 புள்ளி)*

எல்லை விளைவுகள் குறைவடைதல் *(1 புள்ளி)*

விளக்கம் *(1 புள்ளி)*

3. நிரம்பலைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் *(1 புள்ளி)*


குறித்த ஒரு விலையில் உற்பத்தியாளரினால் வழங்கத் தயாரான அளவு நிரம்பல் தொகை ஆகும். *(1 புள்ளி)*




நிரம்பல் கோட்டின் மீதுள்ள குறித்த ஒரு புள்ளியினால் வெளிப்படுத்தப்படும்.

நிரம்பலைத் திர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் *(1 புள்ளி)*

பண்டமொன்றிற்கு நிலவுகின்ற பல்வேறு விலைகளிற்கு ஒவ்வொரு விலையிலும் உற்பத்தியாளரினால் வழங்கத் தயாரான அளவுகளிற்கும் இடையிலான தொடர்பினை விளக்குவது நிரம்பல் ஆகும். *(1 புள்ளி)*




நிரம்பல் கோடு ஒன்றின் முழு வடிவம் நிரம்பலைப் புலப்படுத்தும். *(1 புள்ளி)*



kalvi.lk

4. சம அளவான உள்ளீடுகளையும் சம அளவு தொழில்நுட்பத்தினையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் வேறுபட்ட பண்டங்கள் குறிப்பிட்ட பண்டத்துடன் தொடர்புடைய பண்டங்கள் எனப்படும். *(2 புள்ளி)*

Ex:- மிளகாய்ப் பயிர்ச்செய்கை - வெங்காயப் பயிர்ச்செய்கை *(1 புள்ளி)*

ஏனையவை மாறாதிருக்க தொடர்புடைய பண்டமொன்றின் விலை மாற்றம் குறிப்பிட்ட பண்டத்தின் நிரம்பலில் எதிரான மாற்றத்தினை ஏற்படுத்தும். *(1 புள்ளி)*

அதாவது தொடர்புடைய பண்டத்தின் விலை குறைவடைந்தால் குறிப்பிட்ட பண்டத்தின் நிரம்பல் அதிகரிப்பதாகவும், தொடர்புடைய பண்டத்தின் விலை உயர்வடைவதால் குறிப்பிட்ட பண்டத்தின் நிரம்பல் குறைவடைவதாகவும் காணப்படும். *(1 புள்ளி)*

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page